**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO. 12/2025**

| Name: பவ்யா | Caste: |
|---|---|
| Father's Name: **வேல்முருகன்**<br>Husband Name : **லோகநாதன்** | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 26.02.2026 | |

**<u>26.02.2026</u>**

**விசாரணை தொடங்கிய நேரம் 12.05 PM**

**வா.சா. 1 – முதல் விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கில் நான் 3 வது வாதி ஆவேன். எனது தரப்பில் 1–வது சாட்சியாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாணவாக்குமூலத்துடன் கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களையும் எனது தரப்பு சான்றாவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

| வரிசை | தேதி | குறிப்பு | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 1. | 03.01.1994 | என்னுடைய அப்பா வேல்முருகன் அவர்களின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | அசல் |
| 2. | | திருமதி.தனலட்சுமி எழுதிக்கொடுத்த கடிதம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | அசல் |
| 3. | 03.09.2021 | தனலட்சுமி எழுதிக்கொடுத்த ஆணையுறுதி பத்திரம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | அசல் |
| 4. | 24.06.1984 | என்னுடைய அம்மாவிற்கும் என்னுடைய அப்பாவிற்கும் நடைபெற்ற திருமணத்தின் திருமண அழைப்பிதழ் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | நகல் |
| 5. | | என்னுடைய அம்மாவின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | நகல் |

| | | | |
|---|---|---|---|
| 6 | | என்னுடைய சகோதரி திவ்வியாவின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | நகல் |
| 7 | | என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | நகல் |
| 8 | | என்னுடைய சகோதரி சத்தியாவின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | நகல் |
| 9 | 31.03.2004 | என்னுடைய சகோதரி திவ்வியாவின் மாற்று சான்றிதழ் அசலுடன் ஒப்பிட்டு வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | நகல் |
| 10 | 11.06.2002 | என்னுடைய மாற்று சான்றிதழ் அசலுடன் ஒப்பிட்டு வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | நகல் |
| 11 | | என்னுடைய சகோதரி சத்தியாவின் மாற்று சான்றிதழ் அசலுடன் ஒப்பிட்டு வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | நகல் |
| 12 | 17.08.2022 | எனது மனு நிராகரிப்பு ரசீது இணையத்தில் பதிவிறக்கப்பட்டது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | நகல் |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய பெயர் பவ்வியா, கணவர் பெயர் லோகநாதன். நான் மானாம்பதி மேல்தெருவில் வசித்து வருகிறேன். என்ன காரணத்திற்காக நீதயிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் என்னுடைய தந்தை வேல்முருகனின் வாரிசு சான்றிதழ்காக சாட்சியம் அளித்து வருகிறேன். என்னுடைய தந்தை 1993 ம் ஆண்டு இறந்தார். என்னுடைய அம்மா பெயர் அமராவதி. வேல்முருகன், அமராவதிக்கும் பிறந்தவர்கள் திவ்வியா, சத்தியா மற்றும் நான். இவர்கள் அனைவருக்கும் திருமணம் முடிந்துவிட்டது.

என்னுடை யதந்தைக்கு 1 வது வாதியுடன் திருமணத்திற்கு முன்பாக தனலட்சுமி  என்வருடன் திருமண் நடைபெற்று அது சட்டப்படியாக விவாரகரத்து பெறவில்லை என்றால் சரிதான். ஆனால் ஊர் தலைவர்கள் முன்னிலையில் அந்த திருமணத்தை ரத்து செய்து எழுத்து பூர்வமாக எழுதப்பட்டது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

என்னுடைய தந்தை இறந்துவிட்டார். தனலட்சுமி என்பவர் உயிருடன் தான் உள்ளார். அவருக்கு சிறுவேடலில் வேறு ஒருவருடன் திருமணம் ஆகிவிட்டது. தனலட்சுமி என்னுடைய தந்தையுடன் வாழ்ந்த கால்தில் அவர்களுக்கு வாரிசுகள் எதுவும் இல்லை. என்னுடைய தந்தைக்கு சொந்தமான சொத்துக்கள் உள்ளது.

இதற்கு முன்பாக எங்காவது வாரிசு சான்றிதழ் கோரி மனு செய்தேனா என்றால் உத்திரமேரூர் தாலுக்கா அலுவலகத்தில் மனு செய்தோம் ஆனால் அது சரியான ஆவணங்கள் இல்லாத காரணத்திற்காக நிராகரிக்கப்பட்து. அந்த அலுவலகத்தில் மனு செய்து வாரிசு சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. வேல்முருகன் மற்றும் அமராவதிக்கு ஆண் வாரிசுகள் யாரும் இல்லை. என்னுடைய தந்தையின் கடைசி காலத்தில் எங்களுடன் தான் வாழ்ந்து வந்தார். அவருடைய இறுதி சடங்குகள் அனைத்தையும் நாங்கள் தான் செய்தோம்.

நான் தாலுக்காவ அலுவலகத்தில் மனு செய்து உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்திற்காக அது நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் இருந்து பெறவேண்டும் என நிராகரிக்கப்பட்டது.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.45 PM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**